


"கடல் தாண்டி வருவானேன்? கவலைப்படுவானேன்?"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 250

வெள்ளிக்கிழமை
02 ஓகஸ்ட் 2024




நெடுந்தீவுக் கடற்பரப்பில் விபத்து;

# தமிழக மீனவர் பரிதாபச்சாவு: இருநாட்டு உறவில் விரிசல்?

அத்துமீறிய மீன்பிடியால் வந்தது வினை

**யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 2**

நெடுந்தீவுக் கடற்பரப்பில் நேற்று வியாழக் கிழமை அதிகாலை அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த தமிழக மீனவர்களின் படகொன்று விபத்துக்குள்ளானதில் மீனவர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றொருவர் காணாமல் போயுள்ளார். இது இரு நாடுகளின் உறவில் பெரும் விரிசலை ஏற்படுத்தும் விடயமாக மாறியுள்ளது. 11





## மீனவர் உயிரிழப்பு; தமிழகம் கொதிப்பு

சென்னை, ஓக. 2

நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட தமிழகமீனவர்களின் படகு விபத்துக்குள்ளானதில், மீனவர் ஒருவர் உயிரிழந்ததையடுத்து தமிழகத்தில் பதற்றமான நிலைமை ஏற்பட்டுள்ளது. 11

## மயங்கி சரிந்தவர் நேற்று உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 2

மோட்டார்சைக்கிளில் சென்றபோது, மயங்கி வீழ்ந்தவர் சிகிச்சையின் போது நேற்று உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் - ஈச்சமோட்டையைச் சேர்ந்த கபிரியேற் பிள்ளை கியோமர் (வயது -75) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 27ஆம் திகதி பிறந்தநாள் கொண்டாட்டத்துக்காக 11

## ஜனாதிபதி ரணிலை சு.க. ஆதரிக்காது!

தயாசிறி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 2

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் முடிவை சுதந்திரக் கட்சி எடுக்கவில்லை என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் என்று தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளும் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். 11

ஜனாதிபதித் தேர்தல்

## கட்சி தீர்மானித்தால் முடிவுகள் மாறலாம்!

மஹிந்த நேற்று 'ருவிஸ்ட்'



கொழும்பு, ஓக. 2

ஜனாதிபதித் தேர்தலில் பொது ஜன பெரமுன தனியான வேட்பாளரைக் களமிறக்கும் முடிவை எடுத்துள்ள நிலையில், முடிவில் மாற்றங்களை மேற்கொள்வதற்குக் கட்சி தீர்மானித்தால் மாற்றம் வரலாம் என்று பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். 11



## ரணிலை ஆதரிக்க தினேஷ் முடிவாம்!

கொழும்பு, ஓக. 2

ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி தீர்மானித்துள்ளது. கட்சியின் மத்திய குழுக்கூட்டம் நேற்றுப் பிற்பகல் கூடியபோதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.
(அ-ம-26)

சென்னை - யாழ்ப்பாணம்

## செப்ரெம்பர் மாதம்முதல் தினசரி விமான சேவை!

சென்னை, ஓக. 2

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கலாசார மற்றும் வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்தியாவின் இண்டிகோ விமானசேவை நிறுவனம் சென்னை மற்றும் யாழ்ப்பாணம் இடையே தினசரி நேரடி விமான சேவைகளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்க 11

## சிறுமியிடம் துர்நடத்தை; சந்தேகநபர் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஓக. 2

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர், 9 வயதுச் சிறுமி ஒருவரை கடத்திச் சென்று துர்நடத்தைக்கு உட்படுத்திய 11

## பொலிஸ் நிர்வாகம்; லலித் நியமனம்

கொழும்பு, ஓக. 2

பொலிஸ் நிர்வாகப் பிரிவின் தலைவரின் பணிகளை மேற்பார்வையிடுவதற்காக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் பதிநாயக்க தேசிய பொலிஸ் ஆணைக்குழுவால் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார். 11

## ஜனாதிபதி ரணில் இன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஓக. 2

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்றையதினம் யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார்.

மருதங்கேணியில் கடல்நீரை நன்னீராக மாற்றும் திட்டம் இன்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பித்துவைக்கப்படவுள்ள நிலையில் இந்த நிகழ்வில் ஜனாதிபதி 11

## விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சையின்போது இறப்பு



யாழ்ப்பாணம், ஓக. 2

பருத்தித்துறை - புற்றளைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில், காயமடைந்த வடமராட்சிக் கல்வி வலய உத்தியோக்த்தர் சிகிச்சையின் போது நேற்று உயிரிழந்தார். யோகலிங்கம் அருள்காந்தன் 11

## இஸ்ரேலைத் தாக்குக: ஈரான் அதிரடி உத்தரவு

ஹிஸ்புல்லாவுக்கும் ஆயுதங்கள்

தெஹ்ரான், ஓக. 2

ஹமாஸின் அரசியல் பிரிவுத் தலைவரான இஸ்மாயில் ஹனியேவின் படுகொலைக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், இஸ்ரேல் மீது நேரடித் தாக்குதல்களை 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழ்ப் பொதுவேட்பாளர் இந்தவாரம் தெரியவரும்

## விக்னேஸ்வரன் ஆரூடம்

**யாழ்ப்பாணம், ஓக. 2**
**ஒரு வாரத்துக்குள் தமிழ்ப் பொதுவேட்பாளர் அறிவிக்கப்படுவார் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

தமிழ்ப் பொதுவேட்பாளரை தெரிவு செய்வதில் பல்வேறு தடைகள் காணப்பட்டமை உண்மைதான். ஏனெனில் ஒருவரது பெயரைக் கூறினால் மற்றவர்கள் அவரிடம் இருக்கும் பிழைகளை சுட்டிக்காட்டி தவிர்க்க கூறுகி றார்கள். தமிழ்த் தரப்பைப் பொறுத்தவரையில் பொதுவாகவே ஒரு விடயத்தைச் செய்வதென்றால் பல்வேறு தடைகளை சந்திக்கநேரிடுவது வழமை. இருந்தாலும் எதிர்வரும் வாரம் அளவில் தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பில் பெயர் அறிவிக்கப்படும் தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பில் தெற்கில் உள்ள அரசியல் கட்சிகள் எதிர்பார்ப்பில் உள்ள நிலையில் எனது வீடு தேடி வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுவேட்பாளர் விடயத்தை விடுமாறு கூறாமல் கூறிச்சென்றார்.

தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு மக்கள் தமது ஆதரவை வழங்குவதனால் எமது நிலைப்பாடு தொடர்பில் தெற்குக்கும் சர்வதேசத்துக்கும் எடுத்துக் கூறுவதற்கு வழிவகுக்கும்.

முதலாவது வாக்கை தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு வழங்கி இரண்டாவது வாக்கை தென்னிலங்கையைச் சேர்ந்த வேட்பாளர் ஒருவருக்கு வழங்குவதால் சில விடயங்களை சாதிப்பதற்கு ஊன்றுகோலாக அமையும் என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து. வாக்களிப்பது மக்களுடைய உரிமை. அவர்கள் யாருக்கு வாக்களிக்கவேண்டும் என்பது தொடர்பில் அவர்கள் சிந்தித்து வாக்களிக்கலாம். (ஓ-20)

## ரணிலின் பரப்புரைக்கு தினேஷ் தலைமை



கொழும்பு, ஓக. 2
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான தேர்தல் பரப்புரை நடவடிக்கைக்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமை யேற்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனக் கட்சியின் முடிவைமீறி ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு வழங்கியுள்ள மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் சுதந்திரக் கட்சியின் நிமால் சிறிபாலடி சில்வா தரப்பினரே இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க சுயாதீன வேட்பாளராக களமிறங்குவதால் பரப்புரை நடவடிக்கையும் எந்தவொரு கட்சியையும் சாராது பொதுவாக இருக்கவேண்டும் எனவும், கூட்டணி சார்ந்தே அலுவலக ரீதியிலான பரப்புரைகளும் இடம்பெற வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார் எனவும் தெரியவருகின்றது. (ஒ-44)



## தேர்தல் முறைப்பாடுகள் 125

கொழும்பு, ஓக. 2
தேர்தல் தொடர்பில் 125 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரச நிறுவனங்களில் நியமனங்கள், பதவி உயர்வுகள் மற்றும் இடமாற்றங்கள் தொடர்பிலும் அரச சொத்துகள் துஷ்பிரயோகம் தொடர்பில் அதிகளவு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## மொட்டின் வேட்பாளர் 5 ஆம் திகதி அறிவிப்பு



கொழும்பு, ஓக. 2
ஒற்றையாட்சி மற்றும் தேசிய பொருளாதாரத்தை பாதுகாக்கக்கூடிய பொதுஜன பெரமுனக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் எதிர்வரும் 5ஆம் திகதி அறிவிக்கப்படுவார் என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமது கொள்கையை முன்னெடுக்கக்கூடிய, கடனை ஒத்திவைப்பதற்குப் பதிலாக செலுத்தக்கூடிய, தேசிய வளங்களை விற்காமல், முதலீடுகளை கொண்டுவரக்கூடிய, மக்கள்மீது அதிகளவு வரிச்சுமையை திணிக்காது, சாதாரண வரி முறைமையின்கீழ் அரச வருமானத்தை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுக்கக்கூடிய, தேசிய பொருளாதாரம் மற்றும் ஒற்றையாட்சியை பாதுகாக்கக்கூடிய வேட்பாளரையே நாம் நிறுத்துவோம். பரந்தளவிலான கலந்துரையாடலின் பின்னர் எதிர்வரும் 5 அல்லது 6 ஆம் திகதியளவில் வேட்பாளர் பெயரிடப்படுவார் - என்றார். (ஒ-44)

## கட்டுப்பணம் செலுத்தினார் விஜயதாஸ ராஜபக்ச

கொழும்பு, ஓக.2
2024 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வகையில் தேசிய ஜனநாயக முன்னணியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக விஜயதாஸ ராஜபக்ச நேற்று வியாழக்கிழமை கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

ராஜகிரியவிலுள்ள தேர்தல் ஆணைக்குழுவில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

2024 செப்ரெம்பர் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு நேற்று மாத்திரம் 7 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## பொலிஸார் தரப்பில் தடையேதும் இல்லை




கொழும்பு, ஓக. 2
ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு பொலிஸாரினால் எவ்வித தடையும் இல்லை எனப் பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, தேர்தலை நடத்துவது தொடர்பான ஆதரவை பொலிஸார் வழங்குவார்கள் என அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளார். (ச-இ)

## தேர்தல் கட்டுப்பணம் விரைந்து கட்டுங்கள்

### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 2
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர்கள் ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை கூடிய சீக்கிரம் செலுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் அதன் தலைவர் ஆர்.எம்.எல்.ஏ.ரத்நாயக்க தெரிவிக்கையில்,

ஜனாதிபதி வேட்பாளர்கள் முன்கூட்டியே கட்டுப்பணம் செலுத்துவதன் மூலம் இறுதி நேரத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.

எதிர்வரும் 14 ஆம் திகதி வரையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்துவதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# ராஜபக்சக்கள் உதறினாலும் ரணிலை ஆதரிக்கமாட்டோம்

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஓக.2
ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க மற்றும் ராஜபக்சக்களுக்கிடையிலான உறவுமுறிந்திருந்தாலும் கூட ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவதற்கு நாம் தயார் இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;
ரணில் பக்கம் ராஜபக்சக்கள் இல்லை என்றாலும் பிரசன்ன ரணதுங்க, நிமால் லான்சா போன்றவர்கள் உள்ளனர்.

மேலும் பல கொள்ளையர்களும் உள்ளனர். நாடாளுமன்றத்தில் மிளகாய்த் தூள் தாக்குதல் நடத்தியவர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர். எனவே, ரணிலுக்கு நாம் ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால்தான் நாம் கட்சியை விட்டு வெளியேறினோம். ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவே வெற்றிபெறுவார். - என்றார். (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் மீட்பு இவ்வருடம் இருமடங்கு



கொழும்பு, ஓக. 2

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் இருமடங்கு போதைவஸ்து கைப்பற்றப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு முப்படையினரும் இணைந்து 560 கிலோ ஹெரோய்ன், 3,350 கிலோ கஞ்சா, 5.220 கிலோ கேரள கஞ்சா,60 கிலோ ஐஸ், 1,51,000 வலி நிவாரணி மாத்திரைகள்,6,650 லீற்றர் கசிப்பு என்பவற்றை கைப்பற்றினர். இந்த ஆண்டின் ஜுலை மாதம்வரை 270 கிலோ ஹெரோய்ன், 3,640 கிலோ கஞ்சா, 12,720 கிலோ கேரள கஞ்சா, 150 கிலோ ஐஸ், 43,600 வலி நிவாரணி மாத்திரைகள், 5,000லீற்றர் கசிப்பு என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-6)

# இளையோரிடையே அதிக உடற்பருமன்

கொழும்பு, ஓக.2

நாட்டில் இளையோர் மத்தியில் அதிக எடை மற்றும் உடல் பருமன் விகிதம் வேகமாக அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சின் செயலாளர் மருத்துவர் பாலித மகிபால தெரிவித்துள்ளார்.

சுமார் 48 சதவீத பெண்கள் அதிக எடையுடனும் 33.3 சதவீத ஆண்கள் ஆரோக்கியமான எடையை விட அதிக எடையுடனும் உள்ளனர்.

உடற்பயிற்சியின்மை மற்றும் ஆரோக்கியமான உணவுகளில் கவனம் செலுத்தாமையே இதற்கு காரணம். சர்க்கரை, கொழுப்பு மற்றும் உப்பு அதிகமாக உட்கொள்ளும்போது உடற்பயிற்சி செய்யும் அளவில் கவனம் செலுத்தவேண்டும். அத்தியாவசிய காய்கறிகள் மற்றும் பழங்கள் உட்கொள்ளல் குறைந்துள்ளது. இலங்கையிலுள்ள அதிக எண்ணிக்கையிலான மக்கள் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்படுகின்றனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

கடந்தகாலப் போரில்

# அங்கவீனர்களாக 60,000 படையினர்

கொழும்பு, ஓக.2

கடந்த 30 வருட காலப் போரில் 60 ஆயிரம் படையினர் அங்கவீனமுற்றிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார். இவர்களில் 10 ஆயிரம் பேர் சக்கர நாற்காலியில் வாழ்ந்து வருகின்றனர். குருநாகல், அநுராதபுரம், கும்புறுப்பிட்டி, அத்திடிய போன்ற இடங்களில் இவர்களுக்கான நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடமையின் போது உயிரிழந்தவர்கள் மற்றும் மருத்துவ காரணங்களின் நிமித்தம் 55 வயதுக்கு முன்னரே ஓய்வுபெற்றவர்களுக்கு 55 வயது வரை உரிய சம்பளம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

# யாழ். மீனவர்களுக்கு சீன அரசின் வலைகள்

சீன அரசாங்கத்தால் மீனவர்களுக்கு வழங்கப்படவிருக்கும் வலைகள் யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. குறித்த வலைகள் தற்போது கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள யாழ்ப்பாணம் மாவட்ட அலுவலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 26 ஆயிரத்து 700 வலைகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.சுதாகரன் தெரிவித்தார். (ரி-20)

# பசுமாடு கடத்தல் ஒருவர் கைது



யாழ்., ஓக. 2

அனுமதிப் பத்திரம் இன்றி பசுமாட்டை ஏற்றிச் சென்ற ஒருவரை நேற்றுமுன்தினம் இரவு ஊர்காவற்றுறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

3 ஆம் வட்டாரம் சின்னமடுவைச் சேர்ந்த ஒருவர் பசுமாட்டை கடத்திச் செல்வதாக பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வு தகவலுக்கமைவாக சந்தேகநபரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அத்துடன் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-125)

# தமிழ்ப் பொதுவேட்பாளர் தேவையா? வவுனியாவில் கலந்துரையாடல்

வவுனியா, ஓக. 2

தமிழ்ப்பொதுவேட்பாளர் தமிழரின் அரசியல் இருப்புக்குத் தேவையா? என்ற தொனிப்பொருளிலான கலந்துரையாடலுக்கு வவுனியாவைச் சேர்ந்த பொது அமைப்புகள் மற்றும் சிவில் அமைப்புகள் என்று தம்மை அறிமுகப்படுத்தியுள்ளோர் அழைப்பு விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்களால் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப்பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் சிவில் அமைப்புகளும் தமிழ் தேசியப்பரப்பில் உள்ள கட்சிகளும் ஒன்றிணைந்து எடுத்துள்ள நிலைப்பாடு சாத்தியமானதா என்பது தொடர்பில் வவுனியா மக்களுடைய நிலைப்பாடு தொடர்பில் கலந்துரையாடுவதற்கும் அது தொடர்பிலான கருத்துக்கணிப்பை மேற்கொள்வதற்கும் தீர்மானித்துள்ளோம்.

இதுவரை காலமும் தமிழ்ப் பொது வேட்பாளரை களம் இறக்குவது தொடர்பில் செயற்பட்டு வரும் சிவில் அமைப்புகளும், தமிழ் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகளும் எம்முடன் எவ்விதமான கலந்துரையாடலையும் மேற்கொள்ளவில்லை. எனவே எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கும், தற்காலத்தில் தமிழர்களின் அரசியல் இருப்புக்கு தமிழ்ப் பொது வேட்பாளரின் தேவை அவசியமானதா என்பது தொடர்பான கலந்துரையாடல் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் பரப்பில் செயற்பாடு உள்ளவர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என அனைவரையும் அழைக்கின்றோம் என்று அவர்களது ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-110)

# புதினம் தெரியுமோ?

மருத்துவ மாபியாக்களை தேட வெளிக்கிட்டால் முதல்ல போக வேண்டியது உந்தப் பிரைவேட் ஆஸ்பத்திரியளுக்குத்தான். உந்த அர்ச்சுனா டாக்குத்தர் ஏன் தான் பிரைவேட் ஆஸ்பத்திரியளை விட்டிட்டு, அரசாங்க ஆஸ்பத்திரியளில நடக்கிற விசயங்களை மட்டும் எடுத்து பெரும் ஊழல், மாபியா எண்டு சொன்னாரெண்டு தெரியேலை. ஒருக்கா அவர் பிரைவேட் ஆஸ்பத்திரியளில நடக்கிற விசயங்களை நேரில பார்த்தால், அரசாங்க ஆஸ்பத்திரியளை பூப்போட்டுக் கும்பிடவும் கூடும். அந்தளவுக்கு எல்லாத்திலையும் பிரைவேட் ஆஸ்பத்திரியளில லாபநட்டக் கணக்கு பார்த்துத் தான் வேலை நடக்குது. சாம்பிளுக்கு ஒண்டிரண்டு சம்பவங்களைச் சொல்லலாம்.

சில டாக்குத்தர்மார் அரசாங்க ஆஸ்பத்திரியில வேலை செய்தாலும், விசுவாசம் காட்டுறது பிரைவேட் ஆஸ்பத்திரியளுக்குத்தான். ஆனால் தங்கட லாபத்துக்காக அரசாங்க ஆஸ்பத்திரியின்ர வளங்களைத்தான் பாவிப்பினம். ஒரு பெரிய டாக்குத்தர் பிரைவேட் ஆஸ்பத்திரியில வாற வருத்தக் காரரை சோதிச்சு, அவைக்கு ஏதும் கடும் ஒப்பிரேசன் செய்ய வேணுமெண்டால், அதுக்கு லட்சக்கணக்கில தான் வாங்குவார். காசைப் பற்றிக் கவலைப்படாமல் எப்பிடியாவது வருத்தம் மாறினாக் காணும் எண்டு நினைக்கிறவைதான் அவரிட்ட போய் ஒப்பிரேசன் செய்யிறவை. ஆனால் அந்த டாக்குத்தர் வழித் தேங்காயை எடுத்து தெருப்பிள்ளையாருக்கு அடிக்கிறதோட நிக்காமல், அப்பிடி தெருப்பிள்ளையாருக்கு அடிச்ச தேங்காயைப் பொறுக்கி எண்ணெய் வடிக்கக்கூடிய ஆள். எப்பிடி செலவைக் குறைச்சு தனக்கு லாபம் கூட வரப்பண்ணலாம் எண்டுதான் யோசிப்பாராம்.

அவர் பிரைவேட் ஆஸ்பத்திரியில ஒப்பிரேசன் செய்யிறதெண்டு நாள் குறிச்சால், அண்டைக்கு அவர் வேலை செய்யிற அரசாங்க ஆஸ்பத்திரியிலை உள்ள ஒப்பிரேசன் தியேட்டரையும் ரெடியா இருக்கச் சொல்லுவாராம். பிரைவேட் ஆஸ்பத்திரிக்கு ஒப்பிரேசன் செய்யவேண்டிய ஆள் வந்ததும், அவையிட்ட போய், 'இண்டைக்கு இஞ்ச தியேட்டர்ல ஆக்கள் கூட, அதால அரசாங்க ஆஸ்பத்திரிக்குத் தான் கொண்டு போகோணும். அங்க செய்திட்டு பிறகு ஆளை இஞ்ச கொண்டருவம்' எண்டு சொல்லுவார். வீட்டுக்காரருக்கு எங்க ஒப்பிரேசன் நடக்குது எண்டது பிரச்சினை இல்லைத்தானே. அவைக்கு வருத்தம் மாறினாச் சரி. அதால டாக்குத்தர் சொல்லுறதுக்கு ஓமெண்டிடுவினம். டாக்குத்தரும் போன் அடிக்க, அரசாங்க ஆஸ்பத்திரியில இருந்து அம்புலன்ஸ் வரும். அதில பிரைவேட் ஆஸ்பத்திரியில இருந்தவரை ஏத்திக்கொண்டு போய், அரசாங்க ஆஸ்பத்திரியில உள்ள தியேட்டரில ஒப்பிரேசன் செய்வாராம் அந்த டாக்குத்தர். மருந்து, தியேட்டர், உதவியாக்கள் எல்லாமே அரசாங்கச் செலவு. ஆனால் காசு மட்டும் டாக்குத்தருக்கு. சில வேளை ஒப்பிரேசனில ஏதும் ஏடாகூடமா நடந்தாலும், பழி அரசாங்க ஆஸ்பத்திரிக்குத்தான். பிரைவேட் ஆஸ்பத்திரிக்கோ டாக்குத்தருக்கோ எந்தப் பாதிப்பும் வராது. இதில பகிடி என்னெண்டால், எந்தப் பிரைவேட் ஆஸ்பத்திரியில ஒப்பிரேசன் செய்ய இருந்தினமோ, அந்த ஆஸ்பத்திரியின்ர உடுப்பைக்கூட மாத்தாமல் தான் பேஷண்டைக் கொண்டு வருவினமாம். இப்பிடி ஓசியில உழைச்சுப் பழகினவைதான், அரசாங்க ஆஸ்பத்திரியளில தான் மாபியாக்கள் இருக்கினம் எண்டு சனத்துக்குப் பூச்சாண்டி காட்டுகினம் கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலக தமிழ்ப் பூப்பந்தாட்டம் இம்முறை யாழ்ப்பாணத்தில்

## ஆரம்பித்து வைத்தார் வடக்கு ஆளுநர்

**கொழும்பு, ஓக.2**
**உலக தமிழ்ப் பூப்பந்தாட்டப் பேரவையின் ஏற்பாட்டில் ஒன்பதாவது உலக தமிழ்ப் பூப்பந்தாட்டத் தொடர் இம்முறை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உள்ளக அரங்கில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் தொடரின் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் பங்கேற்று சிறப்பித்தார்.

12 நாடுகளைச் சேர்ந்த 514 வீர, வீராங்கனைகளின் பங்குபற்றுதலுடன் ஆரம்பமாகியுள்ள இந்தத் தொடரின் இறுதிப் போட்டிகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

33 பிரிவுகளின் கீழ் இந்தப் போட்டிகள் நடைபெறுவதுடன், சர்வதேச வீரர்களுக்கான பிரிவும் இம்முறை இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-27,26,20)



# சமாதான நீதிவானாக நியமனம்

யாழ்ப்பாணம், ஓக. 2
யாழ்ப்பாணம், கொழும்புத்துறையை சேர்ந்த திருமதி பிரதீபா காங்கேயன் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட உயர்நீதிமன்ற நீதிபதி எஸ்.சூசைதாசன் முன்னிலையில் இவர் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். சமூகச் செயற்பாட்டாளராகவும் கொழும்புத்துறை சனசமூக நிலையத்தின் அங்கத்தவராகவும் பிரதீபா காங்கேயன் பணியாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-125)

# அங்குரார்ப்பணம்!

யாழ்ப்பாணம் , ஓக. 2
தெல்லிப்பழை, கொத்தியாலடி இந்து மயானத்துக்கான மயான அபிவிருத்திச்சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.
வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் செயலாளர் சு.சுதர்ஜன் தலைமையில் தெல்லிப்பழைப் பொது நூலகத்தில் இந்த நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இந்தச் சபை ஆறு மாதங்களுக்குத் தற்காலிகமாகச் செயற்படும் என்றும் உரிய பிரதேச மக்களை அதிகம் உள்வாங்கிய பின்னர் நிரந்தர அபிவிருத்திச் சபையை நிறுவுவதெனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது. (ச-22,66)

# 'மிஸ்டர் சிறிலங்கா'



2024 ஆம் ஆண்டுக்கான 'மிஸ்டர் சிறிலங்கா' போட்டியில், மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டத்திலுள்ள, நானுஓயா பிரதேசத்தைச் சேர்ந்த உதயகுமார் ஷங்கர் கணேஸ் தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு, தெஹிவளையில் குறித்த போட்டி நடைபெற்றது. (ப-20)

# நிழற்பிரதி இயந்திரங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 2
ஊரெழு கணேச வித்தியாசாலைக்கான புதிய நிழற்பிரதி இயந்திரம், ஒலிபெருக்கித் தொகுதி என்பன வழங்கி வைக்கும் நிகழ்வு, பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 12.45 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில், பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் இ.செல்வராஜா, ஊரெழு ஞான வைரவர் ஆலயத் தலைவர் சி.முகுந்தன், யாழ்.வலய ஆசிரிய ஆலோசகர் து.துஷ்யந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இழுபறியாக இருந்த காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும் திடீர் செலவுகள் ஏற்படும். இளைய சகோதர வகையில் காரியங்கள் அனுகூலமாகும். சக வியாபாரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்..

**இடபம்:** குடும்பம் தொடர்பான முடிவுகளை எடுப்பதில் பொறுமை மிக அவசியம். குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரனையாக நடந்துகொள்ளவும். சிறு சிறு மனஸ்தாபங்கள் ஏற்படக்கூடும். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் செல்லவும்.

**மிதுனம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். கையிருப்பு கரையும். பணிச்சுமை அதிகரித்தாலும் சோர்ந்து விடாமல் செய்து முடிப்பீர்கள்.

**கடகம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். தந்தைவழி உறவினர்களால் சில பிரச்சினைகள் குடும்பத்தில் ஏற்படக்கூடும். காரியம் சாதகமாக முடியும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் உதவிகரமாக இருப்பார்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது நல்லது. உதவி கிடைப்பதில் சற்று தாமதம் ஏற்படும். எதிரிகளின் தொல்லைகள் நீங்கும். வியாபாரம் வழக்கம்போல் நடைபெறும். பணியாளர்களால் செலவுகள் ஏற்படும்.

**கன்னி:** உற்சாகமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளின் வருகை செலவுகளை ஏற்படுத்தினாலும் மகிழ்ச்சியே ஏற்படும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். திடீர் செலவுகள் ஏற்பட்டாலும் கடன் வாங்காமல் சமாளித்துவிட முடியும். முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பாதிப்பு எதுவும் இருக்காது.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். புதிய முயற்சிகள் தவிர்க்கவும். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். விட்டுக்கொடுத் துச் செல்லவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கக்கூடும். ஆஞ்சநேயரை வழிபடுவது நன்று. சங்கடங்கள் குறையும்.

**மகரம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். குழப்பங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எச்சரிக்கையாக இருக்கவும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் கூடும்.

**கும்பம்:** எந்தச் செயலிலும் உற்சாகமாகச் செயற்பட முடியாதபடிக்கு சோர்வான மனநிலை ஏற்படக்கூடும். வழிபாட்டின் மூலம் தெளிவு பெற முயற்சிக்கவும். உறவினர்கள் வருகையால் செலவுகள் அதிகரிக்கக்கூடும்.

**மீனம்:** பணவரவு உண்டு. பொறுமையுடன் சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். வீண் விவாதம் செய்யாமல் இருப்பதன் மூலம் மன அமைதி கிடைக்கும். செலவு செய்ய நேரிடும். பிணக்குகள் நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அதிகாரத்தின் இருமுகங்கள்

ஜனாதிபதித் தேர்தல் மெல்ல மெல்ல சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது. வழமைபோன்று கட்சித் தாவல்களும் அமோகமாக நடக்கின்றன. 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அப்போது ஆட்சியில் இருந்தவர்கள் நேரடியாகப் போட்டியிட்டிருக்கவில்லை. இதனால் அரச வளங்களின் முறைகேடு ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் தற்போது நிலைமை அப்படியில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தத் தேர்தலில் போட்டியிடப்போவதாக அறிவித்திருக்கின்றார். அதற்கான பரப்புரைகள் மாத்திரமல்ல, ஜனாதிபதி என்கின்ற தனது பதவிநிலையையும் உபயோகிக்கத் தொடங்கியிருக்கின்றார்.

பொலிஸ்மா அதிபராகச் செயற்படுவதற்கு தேசபந்து தென்னக்கோனுக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத்தடை விதித்தது. அதுவரையில் பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்குமாறு ஜனாதிபதிக்கும் ஆலோசனை கூறியது. 'பதில் பொலிஸ்மா அதிபரை இரு வாரங்களுக்கு ஒருமுறை நியமிக்கவேண்டியிருக்கும். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் என்ற அடிப்படையில் தான் அதைச் செய்யும்போது எதிரணிகள் தமக்கான தேர்தல் பரப்புரைக்கு அதைப் பயன்படுத்திக்கொள்வார்கள். எனவே நான் இதிலிருந்து ஒதுங்கியிருக்கின்றேன்' என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். இங்கே அவர் ஜனாதிபதி என்கின்ற பதவிநிலைக்குரிய கடமையை ஆற்றத் தவறியிருக்கின்றார். அல்லது வேண்டுமென்றே குழப்பநிலையைத் தோற்றுவிப்பதற்காக அந்தக் கடமையைச் செய்யாமல் இருக்கின்றார்.

எதுவாக இருந்தாலும், ஜனாதிபதி என்கின்ற பதவிநிலைக்குரிய கடமை செய்யப்படாமல் இருக்கின்றது. ஜனாதிபதிக் கதிரையை இப்போது அலங்கரிக்கும் ரணில், பொலிஸ்மா அதிபர் விடயத்தில் மாத்திரம்தான் ஜனாதிபதிக்குரிய கடமையை ஆற்றாமல் விடுகின்றாரே தவிர, ஜனாதிபதித் தேர்தலில் தனக்கான ஆதரவுப் பரப்புரைக்கு ஜனாதிபதி என்கின்ற 'கோதா'வில் ஏனைய நடவடிக்கைகளை முன்னெடுப்பதுதான் இங்கே முரணிலையானது.

ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்தார். அந்தச் சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நடந்தது. ஜனாதிபதி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக, ஜனாதிபதி என்கின்ற பதவியைப் பயன்படுத்தி ரணில் விக்கிரமசிங்க அவர்களை அழைத்திருந்தார். அதேபோன்று மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களை அவர் சந்தித்ததும் அதைப்போன்றதுதான்.

இவைமாத்திரமல்ல, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கும் நிகழ்வுகள் தொடர்பான செய்திகளை ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிடுகின்றது. ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கான பரப்புரைக்கு ஜனாதிபதி ஊடகப் பிரிவு தற்போது பயன்படுத்தப்படுகின்றது.

பொலிஸ்மா அதிபர் விடயத்தில் குழப்பத்தை உருவாக்கவேண்டும் என்பதற்காகவே ஜனாதிபதி என்கின்ற பதவிநிலையைப் பயன்படுத்தாமல் ரணில் விக்கிரமசிங்க தவிர்த்துக்கொண்டார் என்பது வெளிப்படையானது. அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்து தனது தேர்தல் பரப்புரைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொலிஸ்மா அதிபர் விடயத்திலும் பொறுப்புடன் நடந்து தேர்தல்கள் ஆணைக்குழு கோருவதைப் போன்று நீதியான தேர்தல் நடைபெறுவதற்கு ஒத்துழைக்கவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.






## கைத்தொழில் பேட்டைகள் வடக்கு-கிழக்கில் விரைவில்

### வர்த்தக இராஜாங்க அமைச்சர் தகவல்



**யாழ்ப்பாணம், ஓக. 2**

**காங்கேசன்துறை உள்ளிட்ட தமிழர் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு கனேடிய முதலீட்டாளர்களுடன் இணைந்து அரச - தனியார் கூட்டு முயற்சியில் 4 கைத்தொழில் பேட்டைகளை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.**

திருகோணமலை, காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் உள்ளிட்ட பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டு அவை ஸ்தாபிக்கப்படவுள்ளன. நாட்டில் 35 முதலீட்டு வேலைத்திட்டங்களுக்காக 800 மில்லியன் டொலர் பெறுமதியான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

இவ்வாண்டில் எமது இலக்கு ஒரு பில்லியன் டொலர் என்ற போதிலும், 2 பில்லியன் டொலர் வரை முதலீடுகளை ஈர்க்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

பாதுகாப்புப் பல்கலை

## மருத்துவபீட வெளிநோயாளர் பிரிவு தினமும் ஆயிரம் பேர் சிகிச்சை

கொழும்பு, ஓக. 2

சேர். ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழக மருத்துவபீட வெளி நோயாளர் பிரிவில் தினமும் ஆயிரம் பேர் சிகிச்சை பெற்று வருவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார். 'லேடி றிட்ஜ்வே மருத்துவமனை, மாத்தறை மருத்துவமனை, மகரகம மருத்துவமனை போன்றவற்றில் விமானப்படையினரும், கடற்படையினரும் கட்டுமானப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஒ-6)

## இறப்பர் உற்பத்தி அதிகரிக்கத் திட்டம்

உலர் வலயத்துக்குட்பட்ட மொனராகலை, அம்பாறை, பதுளை போன்ற பிரதேசங்களில் ஒரு இலட்சம் ஏக்கர் இறப்பர் பயிரிட திட்டமிடப்பட்டுள்ள தாக விவசாய மற்றும் பெருந் தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். இலங்கையில் வருடாந்த இயற்கை இறப்பர் உற்பத்தியை 60 வீதத்தால் அதிகரிக்கும் நோக்கில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

## ஹமாஸ் தலைவர் கொலை; விசேட குழுக்கள் நியமிப்பு

ஹமாஸ் தலைவர் படுகொலையின் காரணமாக ஈரான் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் உலக நாடுகளில் ஏற்படக்கூடிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார அழுத்தங்களை எதிர்கொள்வதற்கு முன் ஆயத்தமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 3 விசேட குழுக்களை நியமித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான விசேட குழுவொன்றும், பொருளாதாரத்தில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆராய்வதற்கான குழுவொன்றும் அந்த இரண்டு குழுக்களின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கான உயர்மட்டக் குழுவொன்றுமே நியமிக்கப்பட்டுள்ளது. இரு குழுக்களும் சமர்ப்பிக்கும் அறிக்கையின் பிரகாரம் உயர்மட்டக் குழு உரிய நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)



## இணையத்தில் மோசடி: வெளிநாட்டவர்கள் கைது

இணையமோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 50 க்கு மேற்பட்ட வெளிநாட்டுப் பிரஜைகள் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 44 ஆண்களும் 9 பெண்களும் அடங்குகின்றனர்.

அவர்களிடமிருந்து 98 அலைபேசிகளும், 44 கணினிகளும், பெருமளவு சிம் அட்டைகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-22,6)

### நாளை

03.08.2024

சனிக்கிழமை - ஆடி - 18

சுபநேரம் : 03.04 - 04.34

ராகுகாலம் : 09.04 - 10.34

### நாளொரு நல்வார்த்தை

**ஒருவனுக்கு அறிவு இருந்தும் ஆற்றல் இல்லையெனில் அவன் வாழ்வு சிறக்காது.**

-ஷாம்பர்ட்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாபாரப் பதிவு காலதாமதம்: 'ஒன்லைன்' முறைமை அறிமுகம்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஓக. 2**

**காலதாமதமின்றி வியாபாரப் பதிவுகளை முன்னெடுப்பதற்கு இணையத்தளப் பதிவு முறையை அறிமுகப்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**

சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் கௌரவ அனுப பஸ்குவலுக்கும் ஆளுநருக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஆளுநர் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சிறுதொழில் முயற்சிகளில் ஈடுபடுவோருக்கான வியாபாரப் பதிவுகளை மேற்கொள்வதில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

கால தாமதமின்றி வியாபாரப் பதிவுகளை முன்னெடுப்பதற்கு இணையதளப் பதிவு முறையை அறிமுகப்படுத்துவது சிறந்த செயற்பாடு. வடக்கு மாகாணத்தில் அதற்கான செயற்பாட்டை துரிதகதியில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று ஆளுநர் தெரிவித்தார்.

அத்துடன் பொதுச்சேவைக்கான செயற்பாடுகளை டிஜிற்றல் மயப்படுத்துவதும் அவசியம். விசேட தேவையுடையோர் பொதுச்சேவைகளை இலகுவில் அணுகக்கூடிய வகையில் கட்டட நிர்மாணங்கள் அமைக்கப்படுதல் வேண்டும். அவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சரிடம் ஆளுநர் கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல், போக்குவரத்துக்கான பஸ்களைப் பெற்றுக்கொடுக்க முயற்சிப்பதாக கூறினார். அத்துடன் விசேட தேவையுடையோர் இலகுவாக அணுகக்கூடிய வகையில் கட்டட நிர்மாணங்களை மேற்கொள்ளாத பொது நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் கூறினார். (ச-26,27)

# நீர் விநியோகம் மட்டுப்பாடு

கிளிநொச்சி, ஓக. 2

கிளிநொச்சியில் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்துக்கே நீர் விநியோகம் இடம்பெறும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை தெரிவித்துள்ளது.

கிளிநொச்சியில் நிலவுகின்ற வெப்பமான காலநிலை காரணமாக பொதுமக்களின் நீர்ப் பாவனையானது வழமைக்கு மாறாக அதிகமாகக் காணப்படுகின்றது.

கிளிநொச்சி நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் உற்பத்தித் திறனை விட மக்களின் பாவனை அதிகரித்துள்ளமையால் நீர் விநியோகத்தை 24 மணிநேரமும் வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இனிவரும் நாட்களில் நீரை மட்டுப்படுத்தப்பட்ட நேர ஒழுங்கில் மேற்கொள்ளப்படும் என கிளிநொச்சி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை அறிவித்துள்ளது.

தொடர்ச்சியாக வெப்பமான காலநிலை நிலவி வருவதன் காரணமாக மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அதனடிப்படையில் பூநகரி, பொன்னகர், பாரதிபுரம், விவேகானந்தநகர் ஆகிய பகுதிகளுக்கு தினமும் காலை 5 மணி முதல் பகல் 12 மணி வரை நீர் விநியோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக் காலப்பகுதியில் குறைந்த அழுத்தத்திலும் நீர் விநியோகம் காணப்படுவதனால் பொதுமக்கள் நீரைச் சிக்கனமாகவும், சேமித்தும் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி அலுவலகம் அறிவித்துள்ளது. (ஒ - 214)

# பொன்.சுகந்தன் பொன்விழாவும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஓக.2

சொல்வேந்தர் பொன்.சுகந்தனின் பொன் விழாவும் வரலாற்று ஆவண நூல்கள் வெளியீடும் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன. ஆரம்ப நிகழ்வு ஓய்வு நிலை மாவட்டச் செயலர் உடுவை எஸ்.தில்லை நடராசா தலைமையில் கொழும்பு தமிழ்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது பொன். சுகந்தனின் 'கலைப் பணிகள்' எனும் நூல் வெளியிடப்படும். மேலும் அவரின் பல நூல்கள் வெவ்வேறு இடங்களில் வெளியிடப்படவுள்ளன.

'சொற்பொழிவுத்துறை' நூல் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ. ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமி தலைமையில் நல்லை ஆலயத்திலும், 'சிறுகதைத் துறை' நூல் இரகசியர் வட்டத் தலைவர் கலாபூஷணம் சு.புண்ணியசீலன் தலைமையில் மாத்தளையிலும், 'திரைப்படம் மற்றும் நாடகத்துறை' நூல் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இல்லத்தில் அவரது பிள்ளைகளான ராம்குமார், இளைய திலகம் பிரபு தலைமையில் இந்தியாவிலும், 'பாடலாக்கத்துறை' நூல் சிவஸ்ரீ.ப.விஜயகுமாரக்குருக்கள் தலைமையில் கனடாவிலும், 'பட்டிமன்றத் துறை' நூல் சிவஸ்ரீ.ஆறுமுக பாஸ்கரக் குருக்கள் தலைமையில் ஜேர்மனியிலும், 'கவிதைத் துறை' நூல் சிவஸ்ரீ.பா.இந்திரக்குருக்கள் தலைமையில் அவுஸ்திரேலியா சிட்னியிலும், 'சமூகப்பணி' நூல் சிவஸ்ரீ.சிவகரன் ஐயர் கிருபாகரக் குருக்கள் தலைமையில் பிரான்சிலும், 'ஓவியத்துறை' நூல் பேராசிரியர் க.திலகவதியம்மா தலைமையில் மலேசியா கோலாம்பூரிலும், 'கல்வித்துறை' நூல் சிவஸ்ரீ.லம்போதரக் குருக்கள் தலைமையில் லண்டனிலும், 'ஆன்மீகப்பணி' நூல் சிவஸ்ரீ.ரவிச்சந்திரக் குருக்கள் தலைமையில் திருகோண மலையிலும், 'ஆய்வுக்கட்டுரைத்துறை' நூல் திருநாவுக்கரசு நாயனார் குருகுலப் பணிப்பாளர் க.இராசரத்தினம் தலைமையில் அம்பாறையிலும் வெளியிடப்படவுள்ளன. (ச-25)



# தமிழ்த்தின விவாதப் போட்டி; பளை மத்திய கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், ஓக.2

வலயமட்ட தமிழ்த்தின மொழித்திறன் விவாதப் போட்டியில் பளை மத்திய கல்லூரி மாணவர்கள் முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டப்போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளனர். சி.ரம்சி, ஆ.அபினாஸ், இ.பிரியங்கா ஆகிய மாணவர்களே வெற்றியீட்டியவர்களாவர். (ச-25,113)

# கிளிநொச்சி மாணவி ஜப்பானுக்கு



புலமைப்பரிசில் பரீட்சையில் (2023) தேசிய மட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற சிங்கள மொழிமூல மாணவர்கள் மூவர் மற்றும் தமிழ் மொழிமூலத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற கிளிநொச்சி மத்திய கல்லூரியில் கற்கும் மாணவி கி. தாருஜா ஆகியோர் ஜப்பான் புகோக்காவில் நடைபெற்ற 36 ஆவது ஆசிய பசுபிக் சிறுவர் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக கல்வி அமைச்சால் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ச -13)

# திருவையாறு ம.வி. தரமுயர்த்தப்படும்

*வலயக் கல்விப் பணிப்பாளர் வாக்குறுதி*

கிளிநொச்சி, ஓக. 2

கிளிநொச்சி, திருவையாறு மகா வித்தியாலயத்தை 1 ஏபி பாடசாலையாக தரமுயர்த்துவதற்கான நடவடிக்கையை முன்னெடுப்பேன் என கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி க.காயத்திரி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

திருவையாறு மகா வித்தியாலயத்தின் பொன் விழா நிகழ்வில் பழைய மாணவர்களின் ஒத்துழைப்புடன் விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளமை மகிழ்வைத் தருகிறது. விழாவுக்கு வருகை தந்த போது பாடசாலையினை தரமுயர்த்துமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. தற்போது இப்பாடசாலை 1 சி பாடசாலையாக உயர்தரத்தில் கலை, வர்த்தக பிரிவுகளுடன் இயங்குகின்றது.

இப்பாடசாலையை தரமுயர்த்த வளங்களை அதிகரித்துக் கொண்டு உயர்தரத்தில் கணித, விஞ்ஞானப் பிரிவுகளை ஆரம்பிக்க வேண்டும் - என்றார். (ஒ -25,13)

# உப்பில் அயடின் குறைவு; தண்டம் ரூ.30,000

யாழ்ப்பாணம், ஓக.2

உப்பில் காணப்படவேண்டிய நியம அளவை விட குறைந்தளவில் அயடின் கலந்து விற்பனை செய்த கடை உரிமையாளர், விநியோகஸ்தர், உப்பு நிறுவன உரிமையாளர் ஆகியோருக்குத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் கோண்டாவிலிலுள்ள பலசரக்குக் கடையில் விற்பனை செய்யப்பட்ட உப்பில் சந்தேகம் [illegible] பரிசோதகர் உப்பின் மாதிரி [illegible] அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு பகுப்பாய்வு அறிக்கைக்காக அனுப்பி யிருந்தார். பகுப்பாய்வுத் திணைக்களத்தின் அறிக்கையில் நியம அளவினைவிடக் குறைந்த நிலையில் அயடீனின் அளவு உப்பில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து கடை உரிமையாளர், விநியோகஸ்தர், புத்தளத்தைச் சேர்ந்த உப்பு நிறுவன உரிமையாளர் ஆகியோருக்கு எதிராக நீதிவான் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்கை விசாரித்த நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா மூவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 30 ஆயிரம் தண்டம் விதித்தார். (ஒ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் போராட்டம் இனியும் வேண்டாம்

## பாதுகாப்புச் செயலாளர் வேண்டுகோள்

கொழும்பு, ஒக.2

நாட்டில் மீண்டும் போராட்டம் முன்னெடுப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது என பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் போராட்டம் வெடிக்கலாம் எனச் சிலர் வெளியிடும் கருத்துகளில் எவ்வித அடிப்படையும் கிடையாது. போராட்டம் நடத்தப்பட்டால் அதனை தடுத்து நிறுத்துவதற்குப் பொலிஸாரும், இராணுவத்தினரும் ஆயத்த நிலையில் உள்ளனர். மீண்டும் அவ்வாறான ஒரு நிலைமை ஏற்பட இடமளிக்கப்படமாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)


### தங்க சங்கிலி விற்பனைக்கு

திருமண வைபவங்களுக்கு உகந்த சுத்தமான 8 சரவன், 4 சவரன் சங்கிலிகள் இரண்டு விற்பனைக்குண்டு.

076 036 0923

### மாபிள் பதித்து தரப்படும்

உங்கள் வீடுகளுக்குத் தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா.
நிலம் இழுத்து பதிக்க 100 ரூபா

077 334 1281


## பெயர்மாற்றம்

நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறையில் வசிக்கும் **ஐயன் கந்தன் சுப்பன்** ஆகிய நான் எனது பெயரை **ஐயன் கந்தன் கணபதி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **ஐயன் கந்தன் கணபதி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(cs55833) (N.1)

**ஐயன் கந்தன் கணபதி**

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## பகிரங்க ஏல விற்பனை

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட நிலைகள், யன்னல்கள், கதவுகள், மரங்கள், ஓடுகள் போன்ற பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

**காலம் : 16.08.2024, வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணி**
**இடம் : தலைமை அலுவலகம், புத்தூர்**

**நிபந்தனைகள்**

1. விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களினையும், அதன் விபரத்தினையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.
2. ஏலதாரராக கலந்து கொள்பவர் மீளளிக்கக்கூடிய வைப்பு பணமாக ரூபா 5,000.00 இனைச் செலுத்தி ஏல விற்பனையில் பங்குபற்றலாம்.
3. சித்தியடைந்த ஏலதாரர் அன்றைய தினமே தங்களால் கோரப்பட்ட ஏலத்தொகையின் முழுத்தொகையினையும் செலுத்தி பொருட்களை அலுவலகத்திலிருந்து அகற்ற வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

021- 2058986

**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**
2024.08.02

(cr.43026) (N-1)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஊரெழு கணேச வித்தியாசாலையின்

## அதிபர் கவிஞர் இரா. ஜெயக்குமார்



அவர்கள் மலேசியா நாட்டின் ஈப்போ நகரில் உள்ள முத்தமிழ்ப் பாவலர் மன்றத்தினால் **2024.07.21** ஆம் திகதி நடத்தப்பட்ட **உலகத் தமிழ் எழுத்தாளர் மகாநாட்டில் " முத்தமிழ்க்கோன் " எனும் பட்டமும் நினைவுச் சின்னமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.**

தக்கார் விருது பெற்ற 16 தமிழ் எழுத்தாளர்களில் இலங்கையர் இவர் ஒருவர் மட்டுமே. இவரது தமிழ்ப் பணிகளுக்காகவும் எமது ஊரெழு கணேசவித்தியாசாலைக்கு ஆற்றும் கல்விப்பணிக்காகவும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

Best Wishes

**வாழ்த்துவோர்: திரு.திருமதி இரத்தினகுமார் நிரஞ்சனா**
**பழைய மாணவர்கள் குடும்பம் - ஜேர்மனி**

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.
## இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்
## 01.09.2024 - 31.12.2024

கீழ்க்குறிப்பிடப்படும் இறைச்சிக்கடைகளை 2024 ஆம் 01.09.2024 - 31.12.2024 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையினால் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி | : 02.08.2024 – 15.08.2024 நண்பகல் 12.00 மணி வரை |
| கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி | : 15.08.2024 வியாழக்கிழமை பி.ப 02.00 மணி வரை |
| கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி | : 15.08.2024 வியாழக்கிழமை பி.ப 02.00 மணி |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் | : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர் |

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் **கேள்வியின் பெயர்** தெளிவாகக் குறிப்பிட்டு மூலப்பிரதியை **"செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்"** என்னும் முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கும் எதிர்வரும் 15.08.2024 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி அறிவித்தல் 01.09.2024 - 31.12.2024

| இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | கேள்வித் தொகை (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | அச்சுவேலி உப அலுவலகம் - புதிய கட்டிடம் | | | |
| 1 | வளலாய் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 96,000.00 |
| 2 | வளலாய் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 50,000.00 |
| புத்தூர் உப அலுவலகம் - (சுன்னாகம் வீதி, புத்தூர் - புதிய கட்டிடம்) | | | | |
| 1 | புத்தூர் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 95,000.00 |
| 2 | புத்தூர் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 581,000.00 |
| 3 | புத்தூர் ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 20,000.00 |

1. சந்தையிலிருந்து 1/2 கி.மீற்றர் சுற்றாடலில் இறைச்சி விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
2. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையுடன் சமுகமளிக்கும் போது அதன் நிழற்படப்பிரதியையும் பிரதேச கிராம சேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது வதிவிடத்தை உறுதிப்படுத்தக்கூடிய வங்கிக்கணக்கு புத்தகப்பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. கேள்விப்படிவக்கட்டணம் கேள்வித்தொகை மாத வாடகை என்பவற்றுக்கு காலத்துக்குக்காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரி செலுத்தப்படவேண்டும். அத்துடன் விலை மதிப்பீட்டுத்திணைக் களத்தினால் மாதாந்த வாடகை மீள்மதிப்பீடு செய்யப்படும் போது மதிப்பீடு செய்யப்படும் தொகை செலுத்தப்படல் வேண்டும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
5. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
6. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அவரது ஒரு பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
7. கேள்வி கோரும் ஒவ்வொரு கேள்விப் பத்திரங்களுக்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத படிவக் கட்டணமும், மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமும் செலுத்தப்படவேண்டும்.
8. உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை இல 03/2015 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி ஒப்பந்தம் செய்யப்படல் வேண்டும். இது தொடர்பான விபரங்களை கேள்விப்பத்திரங்களை பெறும்போது தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
9. சபையின் அச்சுவேலி கொல்களத்தில் / பிரதேச சபையினால் அனுமதிக்கப்படும் கொல்களத்தில் ஆடு, மாடு இறைச்சிக்கடைகளின் குத்தகைதாரர்கள் பாவனைக்குட்படுத்த அனுமதி வழங்கப்படும். மேலும் கொல்களப்பாவனை தொடர்பில் சபையினது அறிவுறுத்தல்களிற்கு குத்தகைதாரர்கள் கட்டுப்படுதல் வேண்டும். கேள்விகள் சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

**இராமலிங்கம் பகீரதன்**
**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**
**2024.08.02**

(cr.43029) (N-1)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
12 . 12 . 1971



உதிர்வு
14 . 08 . 2023

## அமரர் சங்கரப்பிள்ளை சிவகுமார்

**திதி:அபரபட்சம் திரயோதசி**

**(முன்னாள் அபிவிருத்தி உத்தியோகத்தர் (கடற்தொழில் பரிசோதகர்-பதில்), அகில இலங்கை சமாதான நீதவான், மொழி பெயர்ப்பாளர், தமிழ் - சிங்களம், சிங்களம் - தமிழ், போதனாசிரியர் (அரச கரும மொழிகள் திணைக்களம்)**

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே, அன்பின் உறைவிடமே
நெடுந்தூர வாழ்க்கைப் பயணம் பாதி வழியில் விலகியது ஏனோ...
எம் கண்ணீர்த்துளிகளின் ஈரம் இன்னும் காயவில்லை.
ஆண்டு ஒன்று ஆனபோதிலும்
வாழும் காலம் வரை உம் நினைவுகளோடு நாமும்...

***உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.***

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கோண்டாவில் பிறிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுத் தொடரில் வாகை சூடியது கோண்டாவில் பிக் பீற் றர்ஸ் அணி. கோண்டா வில் துர்க்கா விளையாட் டுக்கழக ஸ்தாபகர் அமரர் தம்பித்துரை சிவராஜா நினைவாக நடத்தப்பட்ட கோண்டாவில் பிறி மியர் லீக் கிரிக்கெட் சுற்றுத் தொடர், கழக மைதானத் தில் அண்மையில் இடம் பெற்றது. (ப)

# இந்திய மீனவர் அத்துமீறல் கொள்கைத் தீர்மானம் தேவை



யாழ்ப்பாணம், ஓக. 2

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கட்டுப்படுத்த கொள்கை ரீதியான தீர் மானம் தேவை என அகில இலங்கைத் தொழிலாளர் சமூகங்களின் கூட்ட மைப்பின் தேசிய அமைப்பாளர் என். வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பின் வட மாகாண பொதுச் சபைக் கூட்டம் நேற்று இடம்பெற் றது. அதன் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரி வித்ததாவது,

கரையோரப் பிரதே சங்களில் பயன்ப டுத்தப்படுகின்ற அனைத்துவித மான சட்டவிரோத மீன்பிடி முறைக ளும் நிறுத்தப்பட்டு இயற்கைச் சூழ லைப் பாதுகாப்பதற் கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப் படவேண்டும்.

கடற்றொழில் அமைச்சால் உரு வாக்கப்பட்டுள்ள கடற்றொழில் கொள்கை மீள திருத்தப்பட வேண் டும். அதற்காக மக் களின் கருத்துகள் பெறப்படவேண் டும்.

அதேபோல் தோட்ட அதிகாரிகளால் தொழிலாளர்கள் தொடர்ச்சியாக தாக் கப்படுவதை தடுப்ப தற்கு நிரந்தரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் - என் றார்.

(ஒ-26)

## மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 09 . 1964

மறைவு 31 . 07 . 2024

### மார்க்கண்டு சிறிகாந்தன்

**(பிரதி அதிபர் யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்)**

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சிறிகாந்தன் அவர்கள் கடந்த புதன்கிழமை (31.07.2024) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - கமலாதேவி தம்பதியரின் அன்பு மகனும், இளையதம்பி - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், லோகாம்பிகை (ஆசிரியர் யா/கோப்பாய் நாவலர் வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், சயன் அவர்களின் அன்புத் தந்தையும், நிவேதா (லண்டன்), சுதர்சனன் (லண்டன்), சுரேஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவா (லண்டன்), மாலினி (லண்டன்), கௌரி (லண்டன்), கமலாம்பிகை ஸ்ரீதரன் (ஓய்வுநிலை ஆசிரியர், யா/மட்டுவில் மத்திய மகாவித்தியாலயம்), கைலவாசன் (ஓய்வு நிலை ஆசிரியர் யா/வட்டு இந்து கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சந்தோஸ் (லண்டன்), லக்மிதா (லண்டன்), மிதுசா (லண்டன்), றம்யா (தாதிய உத்தியோகத்தர் ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பளை), கிறீடி (SFS Photography) ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும், ஹரிஸ் (லண்டன்), லவன் (லண்டன்), சங்கீத் (லண்டன்), விஷ்ணுபிரியன் (மாணவன் Jaffna College) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2024) வெள்ளிக்கிழமை மாலை 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**யார்வத்தை லேன்,**
**கோப்பாய் வடக்கு, கோப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 0629 107**

(CS 1053) A-1

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 15.02.1940

இறப்பு 30.07.2024

எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர்
**திரு.நா.மனோரஞ்சிதன்**
அவர்களின் அன்பு மாமியார்

**மாசிலாமணி கிருஷ்ணபிள்ளை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கல்லூரிச் சமூகம்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

**அச்சுவேலி அக்கரை சிறுவர் மகிழ்வூட்டும் கடற்கரையினை பொது தனியார் கூட்டாண்மைகள் கொள்கைக்கமைவாக மனம் கவரும் சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்வதற்கு ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்**

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட அச்சுவேலி அக்கரை சிறுவர் மகிழ்வூட்டும் கடற்கரை யினை பொது தனியார் கூட்டாண்மைகள் (Public-private partnerships) கொள்கைக்கமைவாக மனம் கவரும் சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைவாக, அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக சுற்றுலாத்துறை சார்ந்த நிபுணர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து ஆக்கபூர்வமான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை எதிர்பார்க்கின்றோம். தங்கள் எழுத்து மூலமான கருத்துக்களை 15.08.2024 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **“செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்”** எனும் முகவரிக்கு நேடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ வழங்கி யுதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**

**02.08.2024**

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

**வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் கோப்பாய் சந்தியில் அமைக்கப்பட்ட அம்மாச்சி பாரம்பரிய உணவகத்தில் உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் மற்றும் இரசாயனமற்ற முறையில் பழுத்த பழங்களை விற்பனை செய்வதற்கு விண்ணப்பம் கோரல்**

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பெண் உற்பத்தியாளர்களிடமிருந்து பதிவு செய்யப்பட்டு சுகாதார முறைப்படி வீட்டில் தயாரிக்கப்பட்டு பொதி செய்யப்பட்ட பலகாரங்கள், மா வகைகள், பனை தென்னை உற்பத்திகள், ஆடைசார் உற்பத்திகள், கைப்பணி உற்பத்திகள் மற்றும் இரசாயனமற்ற முறையில் பழுத்த பழங்கள் போன்றவற்றை அம்மாச்சி உணவகத்தின் வளாகத்தில் விற்பனை செய்வதற்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

இதற்கான விண்ணப்பங்களை வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை 15.08.2024 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க வேண்டும். மேலதிக விபரங்களுக்கு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் நேரடியாகவோஅல்லது 021-205 8986 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலமோ தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**செயலாளர்**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**
**02.08.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்புடன் சேர இனித் தடை இல்லை

## பெரமுன கிண்டல்



கொழும்பு, ஓக. 2

ராஜபக்சக்கள் தற்போது இல்லை, எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றுடன் பேச்சு நடத்தி ஆதரவைப் பெற்றுக் கொள்ளுங்கள்- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசுவாசிகளுக்கு பதிலடி கொடுத்துள்ளார் மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்ச.

இது தொடர்பில் அவர் நேற்றுத் தெரிவித்ததாவது:-

ராஜபக்சக்கள் இருப்பதால் தமிழ், முஸ்லிம் கட்சிகள் ரணிலுக்கு ஆதரவு வழங்கவில்லை என முன்னர் கூறிவந்தனர். ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களும் வருவதில்லை எனவும் குறிப்பிட்டனர். தற்போது நாங்கள் இல்லை, தமிழ்க் கூட்டமைப்பினருடன் கதைத்து ஆதரவைப் பெறுங்கள், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் உள்ளிட்டவர்களுடன் பேச்சு நடத்தியும் ஆதரவைக் கோருங்கள்.

மொட்டு அணியினர் சிங்கள - பௌத்த சிந்தனை மற்றும் இடதுசாரிக் கொள்கை உடைய தரப்பு என்பதால்தான் அவர்கள் வருவதில்லை என்றுதானே கூறினீர்கள், இப்போது அதற்கான தடை இல்லையே? எங்களுக்கும் கணக்குக் காட்டத் தெரியும். அன்று நாம் ஜனாதிபதிக்கு ஆதரவளித்தபோது அந்த முடிவை விமர்சித்தவர்களே இன்று ஜனாதிபதி பக்கம் உள்ளனர். நானும் ஜனாதிபதியை ஆதரிக்கும் முடிவை எடுத்திருந்தால் சிறந்த தலைவர் எனப் போற்றி இருப்பார்கள். ஆனால் கட்சி முடிவுடன் நான் இருப்பதால் விமர்சிக்கின்றனர். எனக்குத் தனி நபர்கள் பற்றிக் கவலை இல்லை. கொள்கையே முக்கியமானது - என்றார். (ஓ-44)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
60 ஆவது அகவை காணும் மணிவிழா நாயகன்
சி. தங்கராஜா
Congratulations
(Laboratory Assistant Special Grade - 01)
விலங்கியல்துறை, விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்
பல்கலைக்கழக சேவையில்
39 வருடங்களுக்கு மேலாக
பணியாற்றி பல்கலைக்கழக
ஊழியர் சங்கத்தில் பலமுறை
தலைவராகவும்,
செயலாளராகவும்
வினைத்திறன் மிக்கவராக
சேவையாற்றி
தளராத மனத்தவராக
செயற்பட்டு
இன்று **(02.08.2024)**
**60** ஆவது அகவை காணும்
மணிவிழா நாயகன் அவர்கள்
தமது குடும்பத்தவர்களுடன்
நலமாக வாழ மனதார வாழ்த்தி
பாராட்டுகின்றோம்.



Best Wishes
பாராட்டி வாழ்த்துவோர்
* யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நண்பர்கள்,
* கைதடி தெற்கு, புலம்பெயர் நாட்டு உறவுகள்.




# நடிகை ரம்பா யாழ். வருகை!

யாழ்ப்பாணம், ஓக. 2

யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையம் ஊடாக நேற்று முன்தினம் புதன்கிழமை தென்னிந்திய பிரபல நடிகை ரம்பா தனது குடும்பத்தினருடன் மீண்டும் வருகைதந்துள்ளார்

ரம்பாவின் குடும்பத்தினரால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படுகின்ற தனியார் பல்கலைக்கழகத்தின் ஓராண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்வதற்காக அவர் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார். (ச-22)




யாழ்ப்பாணம், ஓக. 2

இணுவில் பொதுநூலக சிறுவர் திறன்விருத்தி மையச் சிறார்களின் மாபெரும் சிறுவர் சந்தை நிகழ்வு, சிறுவர் திறன் விருத்தி மையவளாகத்தில் இணுவில் பொதுநூலகத் தலைவர் ம. கஜந்த ரூபன் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. (ப-66)

# விசர் நோய் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஓக. 2

யாழ். மாநகரசபை எல்லையிலுள்ள யாழ்நகர் 2 பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது. ஒரு நாய்க்கான தடுப்பூசிக் கட்டணமாக 100 ரூபா அறவிடப்படும். (ஓ-25)

| திகதி | நேரம் | தடுப்பூசி நிலையம் |
|---|---|---|
| 02.08.2024 | காலை 9.00 - மு.ப. 11.00 | கோவில் வீதி ரயில் தண்டவாள சந்தி |
| | மு.ப.11.00 -பி.ப. 1.00 | ஆஸ்பத்திரி வீதி கோவில் சந்தி |
| | பிப.2.30- பி.ப.4.00 | சோமசுந்தரம் வீதி |
| 05.08.2024 | காலை 9.00 - மு.ப. 11.00 | பழைய பூங்கா பகுதி |
| | மு.ப.11.00 - பி.ப. 1.00 | சுவாஸ் லேன் |
| | பி.ப.2.30 -பி.ப.4.00 | கொழும்புத்துறை வீதி விதானையார் வீதி |
| 06.08.2024 | மு.ப.9.00- மு.ப. 11.00 | சந்தனமாதா கோவில் பகுதி |
| | காலை 11.00- பி.ப. 1.00 | கச்சேரி கிழக்குப் பகுதி |
| | பி.ப.2.30 பி.ப.4.00 | குருசோ வீதி கிறின்பில்ட் வாசிகசாலை |
| 07.08.2024 | காலை 9.00 - மு.ப. 11.00 | மத்தியூஸ் வீதி சென். சாள்ஸ் ஆரம்ப பாடசாலை |
| | மு.ப.11.00 -பி.ப. 1.00 | காட்டுக் கந்தோர் ஒழுங்கை |
| | பிப.2.30 பி.ப.4.00 | கச்சேரி நல்லூர் வீதி நாவலர் வீதிச் சந்தி |

# மென்பந்தாட்டப் போட்டியில் அம்பன் பிங்பொங் வெற்றி!



வடமாகாண ரீதியில் நடத்தப்பட்ட மென்பந்தாட்ட இறுதிச் சுற்றில் வெற்றிக்கிண்ணத்தைப் பெற்று வாகை சூடியது அம்பன் பிங்பொங் அணி.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை மென்பந்தாட்டத் தொடரின் இறுதிச் சுற்று நடைபெற்றது.

போட்டியில், அம்பன் பிங்பொங் அணியை எதிர்த்து அம்பன் சிவனொளி அணி களமிறங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அம்பன் பிங்பொங் அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றது.

95 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அம்பன் சிவனொளி அணியினர் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 55 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது. (ப-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விக்ரோரியா முதலிடம்

யாழ்ப்பாணம், ஓக.2

சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியின் 20 வயது பெண்கள் அணி, கிரிக்கெட் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றுத் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. (ப-125)

# மாவிட்டபுரம் கந்தன் சப்பரத் திருவிழா!

யாழ்ப்பாணம், ஓக. 2

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் சப்பரத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை இரவு இடம்பெறவுள்ளது.

'அபிஷேகக் கந்தன்' எனப் போற்றிச் சிறப்பிக்கப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய தேர்த் திருவிழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-22-66)

## மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 11 . 1940



இறப்பு 01 . 08 . 2024

### சரசானந்தன் யோகமலர்

ஏழாலை வடக்கை பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை புகுந்த இடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சரசானந்தன் யோகமலர் இன்று (01.08.2024) வியாழக்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் சரசானந்தன் (முன்னாள் முகாமையாளர் நல்லூர் ப.நோ.கூ.சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும், அமரர்களான கதிரித்தம்பி - இளையப்பிள்ளை தம்பதியரின் மகளும், அமரர்களான மார்க்கண்டு - யோகம்மா தம்பதியரின் மருமகளும், அமரர்களான செல்வரத்தினம், செல்வராசா, நடராசா (சின்னமணி), தங்கராசா (பண்டிதர் - அதிபர்), தங்கமலர், பூமலர், நேசராசா, மல்லிகா மலர் ஆகியோரின் சகோதரியும், சேயோன், தர்சினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தாட்சாயினி, கஜன் (கனடா) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.சயானி, மபினா, ஜதுரி, சஞ்ஜித், றித்தீஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற சோதிமலர் மற்றும் இராஜேஸ்வரன் (கனேஸ்-கனடா) கோகிலாம்பாள், சத்தியசீலன், மீனலோசினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.204) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நீர்வேலி மேற்கு, இராச வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மகன் - சேயோன்
077 6138 222, 077 6138 222

(CS 1056) V-1

## மரண அறிவித்தல்

மண்ணில் 15 . 02 . 1940



விண்ணில் 30 . 07 . 2024

### அமரர் மாசிலாமணி கிருஸ்ணபிள்ளை

அச்சுவேலி தெற்கை பிறப்பிடமாகவும் ஆவரங்கால் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட மாசிலாமணி கிருஸ்ணபிள்ளை அவர்கள் கடந்த (30.07.2024) செவ்வாய்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-இலட்சுமி தம்பதியினரின் மூத்த மகளும் காலஞ்சென்ற சிதம்பரம்-சின்னபிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை (ஓய்வு நிலை தேர்தல் அலுவலக உத்தியோகத்தர், சமாதான நீதிவான்), அன்புத் துணைவியாரும் நவரட்ணம் , இந்திரா (லண்டன்), லோகேஸ்வரன் (இத்தாலி) மற்றும் காலஞ்சென்ற சந்திரசேகரம் (காந்தி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கௌசலா, கந்தசாமி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் சுமதி (ஓய்வு பெற்ற முகாமைத்துவ உத்தியோகத்தர் கட்டடங்கள் திணைக்களம்-வடமாகாணம்), முகுந்தன் (பிரான்ஸ்), வாசுகி (ஆசிரியை-யா/ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நற்குணராஜா (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் யா/சென்ஜோன்ஸ் கல்லூஸரி), அனுசியா (பிரான்ஸ்), மனோரஞ்சன் (விரிவுரையாளர், யா/தேசிய கல்வியற்கல்லூரி கோப்பாய்) ஆகியோரின் அன்பு மாமியும் ஐந்தூரியா (ஊவா வெல்செஸ்ஸ பல்கலைக்கழகம்), சங்கவி (வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி), ராகுல், துளசிராம், மானுஷா, மானஷி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ரேக்கா, அரவிந் ஆர்த்திக் (லண்டன்) ஆகியோரின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2024) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக ஆவரங்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மாசிலகம், ஆவரங்கால்
புத்தூர்.

தகவல்: குடும்பத்தினர்.
077 610 3844

(CS 1057) V-1

## மரண அறிவித்தல்



### சின்னத்துரை குணரத்தினம்

(ஓய்வு பெற்ற இ.போ.ச நடத்துநர்-கோண்டாவில்)

கேணிக்கரை அளவெட்டி வடக்கினை பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி, ஆறுகால் மடத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை குணரத்தினம் நேற்று (01.08.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை-அன்னம் தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-அழகம்மா தம்பதிகளின் மருமகனும் ஆனந்தநாயகியின் அன்புக் கணவரும் முரளிதரன் (இலண்டன்), றமணிதரன் (ஆசிரியர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), தாரணி ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான சண்முகராசா, சிவஞானம், சிவபாலன், மகேந்திரபாலன், அருணகிரிநாதன் மற்றும் செல்வநாயகம் ஆகியோரின் சகோதரனும் சர்மிளா, சுஜிதா (ஆசிரியை-உரும்பிராய் இந்துக் கல்லூரி), சசிதரன் (ஆசிரியர்-இராமநாதன் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும் சாருஜன், சகிர்தன், டிலக்ஷா, ரதுக்ஷன், தக்சயா, விஷ்னுகா, லக்ஷிகா, ஜானுகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 323 0486, 021 221 3337

(CS 1054) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹமாஸ் இராணுவப் பிரிவுத் தலைவர் இஸ்ரேலின் தாக்குதலில் படுகொலை!

டெர்அவிவ், ஓக. 2

ஹமாஸின் இராணுவப்பிரிவின் தலைவர் மொகமட் டெய்வ் கடந்த மாதம் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

காஸாவின் கான்யூனிஸ் நகரில் ஜூலை மாதம் 13ஆம் திகதி பரந்துபட்ட வான் தாக்குதல்களை நடத்தியதாகவும், இதன்போதே மொகமட் டெய்வ் கொல்லப்பட்டார் என்றும் இஸ்ரேலின் உளவுப் பிரிவான மொசாட்டின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இஸ்ரேல் அரசாங்கம் அறிவித்துள்ளது.

எனினும், மொகமட் டெய்வ் கொல்லப்பட்டமை தொடர்பான தகவல்களை ஹமாஸ் அமைப்பு ஏற்றுக்கொள்ளவோ அல்லது மறுக்கவோ இல்லை. ஆனால், கான் யூனிஸ் நகரில் ஜூலை மாதம் 13ஆம் திகதி இஸ்ரேலால் பரந்துபட்ட வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டது என பதை பலஸ்தீன போர்க் கண்காணிப்பாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஹமாஸின் அரசியல் பிரிவுத் தலைவரான ஹனியே இஸ்ரேலால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் கொல்லப்பட்ட நிலையில், இராணுவப் பிரிவின் தலைவர் கொல்லப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டால் அது ஹமாஸுக்குப் பெரும் பின்னடைவைக் கொடுக்கும் வகையிலேயே அமையும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஓக. 2

பண்டத்தரிப்பு காலையடியில் இயங்கிவரும் மறுமலர்ச்சி மன்றத்தின் 52ஆவது ஆண்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணி முதல் இரவு 8 மணி வரை மறுமலர்ச்சி மன்ற உள்ளரங்கில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் புனரமைக்கப்பட்ட நூலகத் திறப்பு விழா, சண் நாடகக் குழுவினரின் நகைச்சுவை நாடகங்கள் மற்றும் சிறார்களின் கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ம-66)

## சிறுமியிடம்...

குற்றச்சாட்டின் கீழ் 33 வயதான குடும்பத்தலைவர் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். சிறுமி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-ஓ-27)

## தமிழக...

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் நெடுந்தீவுக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதையடுத்து, இலங்கைக் கடற்படையினர் அவர்களைக் கைது செய்ய முனைந்தபோதே இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. விபத்தையடுத்து, தமிழக மீனவர்களின் படகு கடலில் கவிழ்ந்தது என்றும், ஒருவர் உயிரிழந்தார் எனவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். இருவர் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இன்னொரு மீனவரைக் காணவில்லை.

"காணாமற்போன இந்திய மீனவரைத் தேடும் பணிகள் இலங்கைக் கடற்படையால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், இந்தியக் கடலோரக் காவற்படையும் இணைந்து தேடுதல்களைத் துரிதப்படுத்தியுள்ளது. எனினும் இன்று (நேற்று) இரவுவரை அந்த மீனவர் மீட்கப்படவில்லை. நாளை (இன்று) இரண்டாம் நாளாகத் தேடுதல்கள் தொடரும்" - என்று இலங்கைக் கடற்படை நேற்றிரவு அறிவித்தது.

மீனவரின் இறப்பு இரண்டு நாடுகளுக்கும் இடையில் தூதரக ரீதியிலான விரிசல்களை ஏற்படுத்தலாம் என்று கருதப்படுகின்றது. பதற்றம் மிக்கதாக இந்த விடயம் மாற்றம்பெற்று வருகின்றது.

கடற்படையின் கைது நடவடிக்கையின் போது மீனவர் உயிரிழந்தமைக்காக புதுடில்லியில் செயற்படும், இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவரை அழைத்து இந்திய அரசின் தரப்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கைக்கான இந்தியத் தூதுவரும் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார். "மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகளை மனிதாபிமானமான முறையில் கையாளவேண்டும் என்று இந்திய அரசு எப்போதும் வலியுறுத்தி வருகிறது. அந்த வகையில் இந்திய - இலங்கை அரசுகளுக்கு இடையே நிலவும் புரிந்துணர்வுகள் கண்டிப்பாக கடைபிடிக்கப்பட வேண்டும். மீண்டும் இத்தகைய சம்பவம் நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்" என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை - இந்திய மீனவரின் உயிரிழப்பானது விபத்து அல்ல என்றும், இது திட்டமிடப்பட்ட கொலை எனவும், தமிழகத் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர். இலங்கைக் கடற்படையினரைக் கொலை வழக்கில் கைதுசெய்ய வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவரான அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

முன்னதாக, ஜூன் மாதம் 25ஆம் திகதி, வடக்குக் கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட மீனவர்களின் படகு, கடற்படையினரின் படகுடன் மோதி இதேபோன்றதொரு விபத்து இடம்பெற்றது. விபத்தில் ரத்நாயக்க (வயது-40) என்ற கடற்படைச் சிப்பாய் உயிரிழந்திருந்தார். அவருடைய இறப்பு நாடளாவிய ரீதியில் பல்வேறு அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. சிப்பாயின் இறப்புக்கு நீதிகோரி வடக்கு மீனவர்கள் போராட்டங்களையும் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-19-20-27-100-26-125)

## ஜனாதிபதி...

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதற்கு சுதந்திரக் கட்சியின் நிமால் சிறிபால டி சில்வா அணி நேற்றுமுன்தினம் தீர்மானித்திருந்தது. 'தமது அணியே உண்மையான சுதந்திரக்கட்சி' எனக்கூறி அந்த அணியினரால் கூட்டப்பட்டிருந்த மத்திய செயற்குழுக் கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே, நிமால் சிறிபால டி சில்வா தரப்பினர் சுதந்திரக் கட்சிக்கு உரிமைகோர முடியாது என்றும், சுதந்திரக் கட்சி ஜனாதிபதி ரணிலை ஆதரிக்கத் தீர்மானிக்கவில்லை எனவும் தயாசிறி ஜயசேகர நேற்றுத் தெரிவித்துள்ளார்.

அரச பலத்தைப் பயன்படுத்தி சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தை மேற்படி தரப்பு பலவந்தமாகக் கைப்பற்றி வைத்துள்ளதால், அவர்களின் முடிவு கட்சியின் முடிவாகாது என்றும் தயாசிறி மேலும் தெரிவித்துள்ளார். (அ-ஓ-44)

## கட்சி...

பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே மஹிந்த இவ்வாறு தெரிவித்தார்.

பெரமுனவின் உள்ளக நிலைமைகள் சிறப்பாகவே உள்ளன. கட்சி என்ற அடிப்படையில் தனியொருவர் [illegible] இதேவேளை - ஜனாதிபதியுடனும் பேச்சுகளை நடத்துவோம். தனியானதொரு வேட்பாளரை நியமிக்கவே பெரமுன தீர்மானித்துள்ளது. இதனால், நிச்சயமாக தனியான வேட்பாளர் நியமிக்கப்படுவார் என்று மஹிந்த மேலும் தெரிவித்தார்.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர், 'அப்படியென்றால் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவதற்கான வாய்ப்பே இல்லையா?' என மஹிந்தவிடம் வினவினார். இதற்கு, "கட்சிமுடிவெடுத்துவிட்டது. ஆனால், முடிவை மாற்றவேண்டும் எனக் கட்சி கூறினால் அதனை நான் செய்வேன்" என்று மஹிந்த தெரிவித்தார். (அ-ம-44)

## மயங்கி...

மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, மயங்கமடைந்து வீதியில் வீழ்ந்துள்ளார். இதையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிரேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## இஸ்ரேலைத்...

மேற்கொள்ளுமாறு ஈரானியப் படைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஈரானின் தலைநகர் தெஹ்ரானில் நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டார். இந்தப் படுகொலை ஈரானுக்குள் நிகழ்ந்ததால் இது ஈரான் மீதான தாக்குதல் எனவும், ஹனியேவின் குருதி வீணாகச் சிந்தப்படாது என்றும் ஈரான் முன்னதாக எச்சரித்திருந்தது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, இஸ்ரேல் மீது நேரடித் தாக்குதல்களை நடத்துமாறு ஈரானின் உச்சத்தலைவர் அயத்துல்லா அல் ஹமேனி உத்தரவிட்டுள்ளார்.

இஸ்ரேலைத் தாக்குவதற்காக தொன் கணக்கான பயங்கரமான ஆயுதங்கள் ஹிஸ்புல்லா அமைப்புக்கும் வழங்கப்பட்டுள்ளன எனவும், லெபனானில் இருந்தும் ஈரானில் இருந்தும் பலஸ்தீனத்தில் இருந்தும் இஸ்ரேலைத் தாக்குவதே நோக்கம் என்றும் சர்வதேச போரியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-ம)

## விபத்தில்...

(வயது-33) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த மாதம் விபத்துக்காக அவர், தொடர்ச்சியாக ஒரு மாதமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார். பருத்தித்துறைப் பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-66)

## ஜனாதிபதி ரணில்...

கலந்துகொள்வதுடன், இதைத்தொடர்ந்து அவர் பல்வேறு அமைப்புகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார் என்று தெரியவருகின்றது. (அ-ம-26)

## மீனவர்...

பலநூறு மீனவர்களும், அவர்களின் குடும்பத்தினரும், அரசியல் கட்சிகளும், சிவில் செயற்பாட்டாளர்களும் இராமேஸ்வரம் துறைமுகம், மீன்பிடித் திணைக்களங்கள் என்பவற்றை முற்றுகையிட்டுத் தீவிரமான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்படைக்கு எதிராக இந்தியா உச்சபட்ச தண்டனைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ-ம)

## பொலிஸ்...

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் அந்தப் பதவியில் பணிகளைத் தொடர உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது. இவ்வாறான நிலையிலேயே, மத்திய மாகாணத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராகக் கடமையாற்றி வரும் லலித் பதிநாயக்க பொலிஸ் நிர்வாகப் பிரிவின் தலைவரின் பணிகளை மேற்பார்வையிடுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளார். (அ-ச-இ)

## செப்ரெம்பர்...

வுள்ளது. சென்னை விமான நிலையத்திலிருந்து பிற்பகல் 1.55 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் மேற்படி நிறுவனத்தின் விமானம் பி.ப. 3.10 மணியளவில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை வந்தடையும்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து பி.ப. 3.55 மணியளவில் புறப்படும் விமானம் சென்னை விமான நிலையத்தினை மாலை 5.10 மணியளவில் சென்றடையும். விமான முன்பதிவு நேற்று முதல் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கி மீதி வசதி
## (SHOW MONEY)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:
**074 173 7684**

## கடைகள் வாடகைக்கு

பருத்தித்துறை வீதியில் சட்டநாதர் கோவில் முன்பாக கடைத் தொகுதிகள் வாடகைக்கு உண்டு

தொடர்பு: **075 045 3385**
**021 222 9229**

## பெண் வேலையாள்கள் தேவை

தையல் கடை ஒன்றிற்கு அனுபவமுள்ள பெண் வேலையாள்கள் தேவை. குறைந்த மாதத்தில் தையல் வகுப்புகளும் நடைபெறும்.

(cs 55832) (N.1)

தொடர்பு: **076 309 9002**

## கார் வாடகைக்கு தேவை

Alto Car/Wagan R கார் மாதாந்த வாடகைக்கு சாரதி அல்லாமல் தேவை.

தொடர்புகளுக்கு: **075 09 06 486**

## வீட்டுப் பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடொன்றிற்கு வீட்டுச் சமையலுக்கு உதவிசெய்தல், வீட்டு வேலைகள் மற்றும் ஆண் முதியவர் ஒருவரைப் பராமரிக்க, பணியாளர் உடன் தேவை.

தொடர்புகளுக்கு:
**078 731 1049**

## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்டிபியூட்டர்ஸ் மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் எனும் நிறுவனங்களுக்கான வேலைவாய்ப்பு ஆண். பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்

தொடர்பு: **077 494 9683**
**077 077 6469**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 112 பரப்புக் காணியில் 24 பரப்பு காணி மட்டுமே விற்பனைக்கு உண்டு.**

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் (2 வது காணி).
- 20 அடிப்பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்.
- ஒரு பரப்பின் விலை 5 1/2 இலட்சம் (550000/=)
- தரகர் தேவையில்லை

**பார்வையிடும் நேரம்:**
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை.

(CS 1043) V-1

தொடர்புகளுக்கு:
ஜெயம் **077 814 7389**
**077 986 5457**

## தொழிற்சாலை ஒன்றிற்கு மேற்பார்வையாளர் தேவை

Supersvisor தேவை

கோண்டாவில் மற்றும் தெல்லிப்பளை ஆகிய இடங்களில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு Supersvisor தேவை (ஆண்). தகுதி உடையவர்கள் விண்ணப்பிக்கவும்.

தொடர்புகளுக்கு:
**077 358 3879**

நவாலி வாள்வெட்டு

## தலைமறைவாக இருந்தவர் ஒருவருடத்தின் பின் கைது

யாழ்ப்பாணம், ஓக. 2

நவாலியில் வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரொருவர் கடந்த ஒரு வருடமாகத் தலைமறைவாக இருந்த நிலையில் அவர் நேற்று வியாழக்கிழமை இரவு மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

2023 ஆம் ஆண்டு ஜுன் மாதம் இளைஞர் ஒருவர் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதலிலேயே மேற்படி நபர் தேடப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-125)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஓக. 2

இணுவில் ஞானாம்பிகா உடனாய ஞான லிங்கேச்சுரர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் தமிழ்நாடு அறநிலையத் துறையின் ஆலோசகர் முதுமுனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனார் ஐயா கலந்து கொண்டு தெய்வத் தமிழால் வழிபடுவோம் எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். (ச-66)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**தோற்றம்** 01.10.1965 — **மறைவு** 03.07.2024

கடந்த 03.07.2024 புதன்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர்**
## சந்திரசேகரம் ஞானேஸ்வரன்

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (02.08.2024) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்திலும் அதனைத்தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் **இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் மணிமண்டபத்தில்** நடைபெறும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**விக்னேஸ்வரா வீதி,
பாலாவோடை,
இணுவில்.**

**குடும்பத்தினர்
077 053 6803**

(cs 55831) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 மின்னஞ்சல்: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.08. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.